திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, பாக்கியிருக்கின்ற விவசாயிகளுக்கும் உடனடியாக பணம் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ? நான்கு ஆண்டுகாலமாக பொதுப்பணித்துறையினரும், வருவாய்த் துறையினரும் வேண்டுமென்றே காலதாமதம் செய்து வருகிறார்கள். ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட பாசன தலைமைப் பொறியாளர், மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகளிடமிருந்து விரிவான அறிக்கை கோரப்பட்டு இருக்கிறது. வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) உள்ளாட்சி அதிகார மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, **அனுமதி வழங்கப்பெற்றது.**

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) இந்திய மின்சார (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு 1980 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1980)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1980 ஆம் ஆண்டு இந்திய மின்சார (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1980)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

---

* 1980 ஆண்டு ஆகஸ்ட் 2 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.